
தமிழை வாசிப்போம்! நேசிப்போம்! சுவாசிப்போம்!

குறிஞ்சி
முத்தமிழ்ச் சங்கம்

Kurinji Muthamizh Sangam

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
**Kurinji Muthamizh Sangam & Academy**
**கொலராடோ - Colorado**

# நிகழினி
## இதழ்




பதிப்பாசிரியர் :
திருமதி. திவ்யா சங்கரசுப்பிரமணியன்

இணை பதிப்பாசிரியர் :
செல்வி. அதிதி முத்துக்குமார்

பதிப்பு :
15/2026/3

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy

# குறிஞ்சி உறுதி மொழி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல்
தொன்மையான நம் தமிழ் மொழி,
தமிழ்க் கலாச்சாரம் மற்றும் தமிழ்ச் சமுதாயத்தில்
நானும் ஒரு அங்கமாக இருப்பதில்
பெருமை கொள்கிறேன்!
தமிழில் பேசவும்,
எழுதவும், படிக்கவும்
நான் என்றும்
முயற்சி செய்வேன் என்று
உறுதி எடுக்கிறேன்!
தமிழை வாசிப்போம்!
நேசிப்போம்!
சுவாசிப்போம்!
வணக்கம்!

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் பக்கம் | 2 |
| 2 | திருக்குறள் | 4 |
| 3 | கண்ணதாசன் காவிய வரிகள் | 4 |
| 4 | இலக்கிய நட்பு –அதியமானும் ஔவையாரும். | 5 |
| 5 | கவிதைகள் சொல்லவா? | 11 |
| 6 | என் பார்வையில் ... | 13 |
| 7 | குழந்தைகள் கைவண்ணம் | 16 |
| 8 | வேட்டை | 17 |
| 9 | சிரிப்பும் சிந்தனையும் தரும் புதிர்கள் | 19 |
| 10 | வாழ்க்கையை மாற்றும் சிறிய பழக்கங்கள் - பகுதி 1 | 20 |

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 12 | வாழ்க்கையை மாற்றும் சிறிய பழக்கங்கள் - பகுதி 2 | 23 |
| 14 | ராமாயணம் காட்டும் வாழ்க்கைப் பாடங்கள் | 26 |
| 15 | காலியான நாற்காலி | 29 |
| 16 | குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & குறிஞ்சி கல்விக்கூடம் குழந்தைகள் திறமையை வெளிப்படுத்தும் விழா | 32 |
| 17 | குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கத்தின் யோகா தினம் மற்றும் தந்தையர் தினக்கொண்டாட்டம் | 33 |
| 18 | விளையாட்டு, கதைகள், தமிழ்ப் பண்பாட்டு உணர்வுடன் ஒரு கோடைகாலம் - குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் கோடை முகாம் 2026 | 35 |
| 19 | குறிஞ்சி கலைவிழா – இசைத் திருவிழா | 39 |

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy

**Editor : Mrs. Dhivya Sankarasubramanian**
**ஆசிரியர் : திருமதி. திவ்யா சங்கரசுப்பிரமணியன்**

**Co-editor : Miss. Aditi Muthukumar**
**இணை ஆசிரியர் : செல்வி. அதிதி முத்துக்குமார்**

ஆசிரியர் இலாகா விளம்பரம் முகவரி
5252 E 130th circle
Thornton
Colorado 80241, USA.
kurinjimuthamizhsangam@gmail.com

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம், தமிழ்ச் சமூகத்திற்காக டிஜிட்டல் வடிவில் **"நிகழினி இதழ்"** வெளியிடுவதில் பெருமை அடைகிறது.

நிகழினி என்றால் மங்கா அறிவொளி பொருந்தியவள், பிரகாசமாக சொலிப்பவள் என்று பொருள்.

இந்த இதழ் தொன்மையான நம் தமிழ்மொழியை நேசிக்கும் மக்களின் சுய படைப்புகள் மற்றும் நிர்வகிக்கப்பட்ட படைப்புகளை உங்கள் வாசிப்புக்காகக் கொண்டு வரும்.

இந்த இதழில் நிர்வகிக்கப்பட்டப் படைப்புகள் அனைத்தும் வாசகர்கள் நல்ல தமிழ் படிக்கும் நோக்கத்தில் இடம் பெறுகின்றன.

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அதை எழுதியவர்களின் சொந்தக் கருத்துகளே!

எந்தவொரு நகல் உரிமைச் சிக்கலுக்கும் உண்மைத்தன்மைக்கும் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் பொறுப்பல்ல.

# ஆசிரியர் பக்கம்

நாம் கொண்டாடும் ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னால் பலரின் தியாகங்கள் புதைந்திருக்கின்றன.ஒரு நாட்டின் சுதந்திர தினம் என்பது வெறும் கொண்டாட்ட நாள் மட்டுமல்ல. அது பல ஆண்டுகளாக நடத்தப்பட்ட போராட்டங்கள், எண்ணற்ற தியாகங்கள், இழப்புகள், நம்பிக்கைகள் மற்றும் விடாமுயற்சிகளின் நினைவுநாள்.



இந்த ஆண்டு அமெரிக்கா தனது 250வது சுதந்திர ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி வருகிறது. 1776 ஆம் ஆண்டு ஜூலை 4 அன்று சுதந்திரப் பிரகடனத்தின் மூலம் தொடங்கிய அந்தப் பயணம், இன்று 250 ஆண்டுகளைக் கடந்து ஒரு நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் பயணமாக மாறியுள்ளது. ஆனால் இந்த வெற்றியின் பின்னால் இருந்த பாதை எளிதானதல்ல. சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள் எதிர்கொண்ட சவால்கள், தியாகங்கள் மற்றும் துணிச்சலே இந்த வரலாற்றின் அடித்தளம்.



அதேபோல், இந்தியா 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று சுதந்திரம் பெற்றது. அந்த சுதந்திரம் ஒரே நாளில் கிடைத்த பரிசல்ல. பல ஆண்டுகளின் போராட்டத்தின் பலன்! எண்ணற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகம், துன்பம், சிறைவாசம், உயிர்த் தியாகம் ஆகியவற்றின் விளைவாக நாம் இன்று சுதந்திரக் காற்றை சுவாசிக்கிறோம்.சுதந்திரத்தின் மதிப்பை உணர, அதன் பின்னால் இருந்த போராட்டத்தை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த உண்மை நம் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் பொருந்தும்.ஒருவரின் வெற்றியைப் பார்க்கும்போது, நாம் பெரும்பாலும் அவர்களின் சாதனையை மட்டுமே பார்க்கிறோம். ஆனால் அந்த வெற்றியின் பின்னால் இருந்த தோல்விகள், காத்திருப்புகள், கடின உழைப்பு, தியாகங்கள் மற்றும் சொல்லப்படாத போராட்டங்கள் நம் கண்களுக்கு தெரிவதில்லை. ஒரு மாணவனின் வெற்றிக்குப் பின்னால் பல ஆண்டுகளின் முயற்சி மற்றும் உழைப்பு இருக்கிறது.ஒரு பெற்றோரின் புன்னகைக்குப் பின்னால் எண்ணற்ற தியாகங்கள் இருக்கின்றன.ஒரு தலைவரின் சாதனைக்குப் பின்னால் பல ஆண்டுகளின் அனுபவமும் சவால்களும் இருக்கின்றன.



வெற்றியை அடைவதற்கு முன், அதை பெறுவதற்கான விலையை வாழ்க்கை கேட்கிறது.அந்த விலையை செலுத்தத் தயாராக இருப்பவர்களே தங்கள் கனவுகளை நனவாக்குகிறார்கள். போராட்டங்களைத் தவிர்த்து வெற்றியை அடைய முடியாது. ஏனெனில் சவால்கள் நம்மை உடைப்பதற்காக அல்ல.நம்மை செதுக்குவதற்காகவும் வலிமையாக்குவதற்கும் தான்.

இந்த சுதந்திர தினங்களில் நாம் கொடியை மட்டும் உயர்த்தாமல், அதன் பின்னால் இருக்கும் தியாகங்களையும் நினைவில் உயர்த்துவோம்.அமெரிக்காவின் சுதந்திரப் பயணமும், இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வரலாறும், ஏன் உலகில் உள்ள சுதந்திரம் கண்ட அனைத்து நாடுகளும் நமக்குச் சொல்லும் ஒரே உண்மை :

> **சுதந்திரம் என்பது ஒரு வெற்றி அல்ல! அது பல தலைமுறைகளின் போராட்டங்களும் தியாகங்களும் சேர்ந்து உருவாக்கிய வரலாறு. கடந்து வந்த பயணத்தின் அடையாளம்!!**

நாம் அடையும் ஒவ்வொரு சிறிய வெற்றிக்கும் பின்னால் இருக்கும் முயற்சிகளை மதிப்போம். நமக்காகப் போராடியவர்களின் தியாகங்களை நினைவில் கொள்வோம். வெற்றியின் உயரத்தை உலகம் பார்க்கும். ஆனால் அந்த உயரத்தை அடைய நடந்த போராட்டப் பயணத்தை சிலரே உணர்வார்கள். சுதந்திரத்தைப் பெற்ற நாடுகள் அதைப் பாதுகாக்கத் தொடர்ந்து முயற்சி செய்வது போல, நாமும் நம் இலக்கை அடைந்த பிறகும் கனவுகளைத் தொலைத்து விடாமல் இருக்க தொடர்ந்து உழைக்க வேண்டும்.



**இந்த சுதந்திர தினத்தில் நாம் ஒரு கேள்வியை நமக்குள் கேட்போம். நாம் இன்று கொண்டாடும் சுதந்திரத்தின் பின்னால் இருக்கும் பயணத்தை நாம் நினைவு கூர்கிறோமா?**

**புத்தகங்களை வாசிப்போம் !**
**உயிர்களை நேசிப்போம்!!**





**இங்ஙனம்**
**திருமதி.திவ்யா சங்கரசுப்பிரமணியன்**
**ஆசிரியர்**

# திருக்குறள்

| திருக்குறள் எண் | 373 |
|---|---|
| பால் | அறத்துப்பால் |
| அதிகாரம் | ஊழ் |



**நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்.**



**பொருள் :** ஒருவன் நுட்பமான நூல் பலவற்றைக் கற்றாலும் ஊழுக்கு ஏற்றவாறு அவனுக்கு உள்ள தாகும் அறிவே மேம்பட்டுத் தோன்றும்.

**Meaning :** A man may have studied many subtle works, But what survives is his innate wisdom.

# கண்ணதாசன் காவிய வரிகள்

குற்றங்கள் மூலம் நியாயங்களைச் சேகரியுங்கள்.

தவறுகளின் மூலம் அனுபவத்தைச் சேகரியுங்கள்.

கர்மத்தின் மூலம் ஞானத்தைச் சேகரியுங்கள்.

நண்பர்களின் மூலம் புத்தியைச் சேகரியுங்கள்.



# இலக்கிய நட்பு – அதியமானும் ஔவையாரும்

தமிழர் பண்பாட்டில் நட்பு என்பது மிகவும் போற்றத்தக்க ஒரு விடயமாகும். சங்க காலத்திலிருந்தே தமிழர்கள் நட்பைப் பெரிதும் போற்றி வாழ்ந்தனர். திருவள்ளுவரும் நட்பு என்ற அதிகாரத்தில் 10 குறட்பாக்களில் நட்பின் சிறப்புப் பற்றித் துல்லியமாக எடுத்துரைக்கிறார்.

## எது உண்மையான நட்பு?

வாழ்க்கையில் நம்மோடு பழகுபவர்கள் எல்லோரும் நமக்கு நண்பர்கள் ஆகிவிட மாட்டார்கள். முக மலர்ச்சியோடு நம்மிடம் பேசுபவர்கள் எல்லோரும் நல்ல நண்பர்கள் என்று சொல்லிவிட முடியாது. இரு நெஞ்சங்கள் ஒன்றுபட்டு மகிழும்படி பொருந்துகின்ற உறவு தான் உண்மையான நட்பு என்கிறார் வள்ளுவர்.

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு.** **-(குறள் 786)**





சங்க காலத்தில் மன்னர்கள் தமிழையும் தமிழறிந்த புலவர்களையும் பெரிதும் மதித்தார்கள். புலவரும் புரவலரும் சிறந்த நட்புடன் பழகினார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பலரைக் கூறலாம்.
அவர்களுள் சிலர் ;
அதியமான்– ஔவையார், பாரி– கபிலர்,
கோப்பெருஞ்சோழன்– பிசிராந்தையார் என்போர். இவரகளுள் **அதியமான்– ஔவையார்** நட்பைப் பற்றி இந்தப் பதிவில் சிந்திப்போம்.



**'கற்றாரைக் கற்றாரே காமுறுவர் '** என்றபடி கல்வியறிவிற் சிறந்த தமிழ் வேந்தர்கள் முத்தமிழ்ப் புலவர்களைப் பெரிதும் போற்றிச் சிறப்பித்தனர் என்றும், அவர்களைத் தம் உற்ற நண்பராகப் போற்றினர் என்றும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

கடையெழு வள்ளல்களுள் ஒருவரான சேரர் மரபைச் சேர்ந்த **அதியமான் நெடுமான் அஞ்சி** என்ற மன்னன் கைம்மாறு கருதாமல் பொழியும் மழை போல் தன்னை நாடி வரும் வறியவர்க்குக் காலமும், இடமும், தகுதியும் பாராமல் வாரி வழங்கும் கொடைத்திறம் படைத்தவன். இவனிடம் பரிசில் வேண்டி ஒரு நாள் சென்றாலும், இருநாள் சென்றாலும், பல நாள் பலரோடு சேர்ந்து சென்றாலும், முதல் நாள் போன்றே முகமலர்ச்சியுடன் வரவேற்று இரவலர் வேண்டிய பொருட்களை அதே விருப்பத்துடன் கொடையளிக்கும் தன்மையுடையவனாக இருந்தான் என்பதை ஔவையார் பாடிய

ஒவாது ஈயும் மாரி வண்கைக்
கடும்பகட்டு யானை நெடுந்தேர் அஞ்சி

ஒருநாட் செல்லலம் இருநாட்செல்லலம்
பலநாள் பயின்று பலரோடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ

என்றும் வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

அதியமானைப் பல புலவர்கள் பாடியிருந்தாலும் ஔவையின் பாடல்களே அவனது பெருமைகளை அதிகமாக எடுத்து இயம்புகின்றன. சங்க காலத்தில் வாழ்ந்த பெண்பாற் புலவர்களுள் சிறந்தவராகக் கருதப்படுபவர் ஔவையார். சங்க காலத்துக்குப் பின்னும் சில பெண்பாற் புலவர்கள் **ஔவையார்** என்ற பெயரில் வாழ்ந்திருக்கிறார்கள்.

“சங்க கால ஔவையாரின் ஆளுமையின் விளைவே பிற்காலத்தில் பல ஔவையார்களின் தோற்றத்திற்கு மூல காரணமாகும் ” என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. இவர் உலகியல் ஞானமும் அரசியல் அறிவும் ஒருங்கே அமையப் பெற்றவராகத் திகழ்ந்திருக்கிறார். இவர் முடியுடைவேந்தர் மூவரையும் பாடியுள்ளார். இருப்பினும் ஔவையாருக்கும் அதியமானுக்குமான நட்பு, “நட்பு” என்ற சொல்லுக்கே இலக்கணமாகத் திகழ்ந்திருக்கிறது. அவர்களுடைய நட்பைப் பறைசாற்றும் நிகழ்ச்சி ஒன்றைப் பற்றிப் பார்ப்போம்.

## அதியமான் – ஔவையார் – அருநெல்லிக்கனி .



அதியமான் ஆண்டு வந்த தகடூர் உயர்ந்த மலைப் பகுதிகளைக் கொண்டது. ஒருமுறை அதியமான் அவன் ஆட்சிக்கு உட்பட்ட குதிரை மலை (கஞ்சமலை) என்ற மலைக்கு வேட்டைக்குச் சென்றான். அந்த மலையில் பலவகை மருந்து மரங்களும், மூலிகைச் செடிகளும் நிறைய வளர்ந்திருந்தன. அங்கு மிகவும் அருமையான நெல்லிமரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தில் அபூர்வமாக ஒரே ஒரு நெல்லிக்கனி கனிந்திருந்தது. அக்கனி உண்டவரை நீண்ட நாள் வாழ வைக்கும் ஆற்றல் உடையது என்று அங்கிருந்த மலைவாழ் மக்கள் அதியமானிடம் கூறினர். ஆனால் மலையின் மிக உயரமான இடத்தில் வளர்ந்திருக்கும் இந்த மரத்தின் கனியை எவரும் எளிதில் சென்று பறிக்க முடியாத அளவிற்குத் தடைகள் நிறைந்த இடம் அது.

வேடுவர்கள் பெருமுயற்சி செய்து அந்த நெல்லிக்கனியைப் பறித்து வந்து அதியமானிடம் தந்தனர். அதியனும் அதைத் தன் மாளிகைக்குச் சென்றபின் உண்ணலாம் என நினைத்து மாளிகைக்குத் திரும்பினான். அச்சமயம் அதியமானைக் காண ஔவையார் அங்கு வந்திருந்தார். ஔவையாரைப் பார்த்ததும் அதியன் மனதில் ஒரு பொறி தட்டியது. “இந்த அரிய நெல்லிக்கனியைத் தான் உண்பதைக் காட்டிலும் ஔவையார் உண்பதே சாலச் சிறந்ததாக இருக்கும்” என்று எண்ணினான்.



உடனே அந்த நெல்லிக்கனியை ஔவையிடம் தந்து, “ஔவையே! இந்த நெல்லிக்கனி நான் வேட்டைக்குச் சென்ற இடத்தில் கிடைத்தது. மிகவும் சுவையானது. அபூர்வமானதும் கூட. இதனைத் தாங்கள் உண்ண வேண்டும் “ என்று வேண்டினான். ஔவையும், “,இக்கனிக்கு அப்படி என்ன சிறப்பு?” என்று வினவினார். அதியமானும், “முதலில் இதை உண்ணுங்கள். அதன்பிறகு அதன் சிறப்பினை நான் கூறுகிறேன். “ என்றான்.

ஔவையும் அக்கனியை உண்டார். “ஆம், இக்கனி மிகவும் சுவையாக உள்ளதே “ என்று வியந்தார். பிறகு அதியமான் அந்தக் கனி தனக்கு எப்படிக் கிடைத்தது, அதன் சிறப்புகள் என்னென்ன, என்றெல்லாம் ஔவைக்கு விளக்கினான். அதைக் கேட்டதும் ஔவை மனம் நெகிழ்ந்து போனார். “அதியனே! இது அபூர்வமான நெல்லிக்கனி என்கிறாய். உண்பவரை நீண்ட நாள் வாழ வைக்கும் ஆற்றல் வாய்ந்தது என்கிறாய். அப்படியிருக்க இதை நீ உண்பது தானே சிறப்பு. நீ உண்ணாமல் எனக்கு ஏன் உண்ணக் கொடுத்தாய்? இதன் சிறப்புப் பற்றி முன்பே என்னிடம் விளக்கியிருந்தால் நான் உண்டிருக்க மாட்டேனே” என்று வருத்தத்துடன் கூறினார்.

“ஔவையே! கனியின் சிறப்புப் பற்றி முன்னமே கூறியிருந்தால் தாங்கள் இதனை உண்டிருக்க மாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். இதனை உண்பதனால் கிடைக்கும் பயனைத் தாங்கள் பெற வேண்டும் என்று நான் விரும்பினேன். அதனால் தான் கூறவில்லை. ஏனென்றால் ஒரு சிறிய நிலப்பகுதியை ஆளும் அரசனாகிய நான் இக்கனியை உண்டு நீண்ட காலம் உயிர் வாழ்வதைக் காட்டிலும், சிறந்த அறிவுரைகளையும், உறுதிப் பொருள்களையும் எடுத்துக் கூறி இந்த உலகினையே நெறிப்படுத்தும் கலையரசியாகிய தாங்கள் உண்டு நீண்ட காலம் உயிர் வாழ்வதே சிறந்ததாகும் என்று நான் எண்ணினேன் . அதனால் தான் இதனைத் தங்களுக்குக் கொடுத்து உண்ணச் செய்தேன் “ என்று அதியமான் கூறினான்.



அதைக் கேட்ட ஔவை அதியமானை வாழ்த்தி ஒரு பாடலைப் பாடினார். “பாற்கடலில் தோன்றிய நஞ்சு முழுவதையும் தான் உண்டு, சாவா மருந்தாகிய அமுதத்தைத் தேவர்களுக்குக் கொடுத்த

நீலகண்டனாகிய சிவபெருமானைப் போல நீ நீண்ட காலம் வாழ்வாயாக “ என்று வாழ்த்தினார்.

> வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
> களம்படக் கடந்த கழல்தொடி தடக்கை
> ஆர்கலி நறவின் அதியர் கோமான்!
> போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி!
> பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
> நீலமணி மிடற்று ஒருவன் போல
> மன்னுக பெரும ! நீயே தொன்நிலைப்
> பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
> சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
> ஆதல் நின்அகத்து அடக்கிச்
> சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே.
>
> **-(புறநானூறு 91)**

இதைக் கேட்ட அதியமான், “ஔவையே! நான் அந்த அருநெல்லிக்கனியை உண்டிருந்தால் நீண்ட காலம் வாழ்ந்திருப்பேன் என்பது உண்மை தான். ஆனால் தாங்கள் பாடிய இந்தப் பாடல் மூலம் தமிழும் இந்த உலகமும் உள்ளளவும் நான் வாழ்வேன் “ என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான்.

## அதியமான்– ஔவையார்— தொண்டைமான் — போர்த்தூது.

அதியமான் வாழ்ந்த காலத்திலேயே காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு, தொண்டை நாட்டைத் தொண்டைமான் இளந்திரையன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் அதியமானுடன் போர் புரிந்து வெற்றி பெறப் பல நாட்களாகத் திட்டமிட்டிருந்தான்.அதற்காகத் தன் படை களைப் பெருக்கிக் கொண்டிருந்தான். ஒற்றர்கள் மூலம் இச்செய்தி அறிந்த அதியமான் தொண்டைமானுடன் போரைத் தவிர்க்க விரும்பினான். போரைக் கண்டு அவன் அஞ்சுபவனில்லை. ஆனாலும் ஔவையார் போன்ற தமிழறிஞர்களோடு அவனுக்கு இருந்த தொடர்பு, போரினால் ஏற்படக்கூடிய உயிரிழப்பு மற்றும் பொருட் சேதம் பற்றி அவனைச் சிந்திக்க வைத்தது. போரில் ஈடுபடும் இரு நாட்டு வீரர்களும் போரில் செத்து மடிவதை அவன் மனம் விரும்பவில்லை. எல்லோருடனும் நட்பு பாராட்டி, அன்பு வழியில் வாழவே அவன் விரும்பினான்.

அதனால் தொண்டைமானுக்கு யாரையாவது தூது அனுப்பி, அந்தப் போரை நிறுத்த விரும்பினான். அவன் கருத்தை அறிந்த ஔவையார் அதியமான் சார்பாகத் தொண்டைமானிடம் தாமே



தூது செல்வதாகக் கூறினார். ஔவையார் தமிழ்ப் புலவர் மட்டுமல்ல; உலகியல் அறிவும், அரசியல் ஞானமும் நிரம்பப் பெற்றவர் என்பதை அதியமான் நன்கு அறிந்திருந்தான். எனவே அவர் தூது செல்வதே சாலச் சிறந்தது என்று கருதினான்.

அதியன் விருப்பப்படியே ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்றார். ஔவையார் தன் மாளிகைக்கு வருவது பற்றி அறிந்த தொண்டைமான் மகிழ்ச்சி யடைந்தான். தமிழை விரும்பும் எவரும் தமிழன்னை ஔவையைப் பற்றி அறியாமல் இருப்பாரா? தொண்டைமானும் ஔவையாரை மிகுந்த மரியாதையுடன் வரவேற்று உபசரித்தான். வெகுநேரம் அவரோடு அளவளாவிக் கொண்டிருந்த போதும் ஔவையார் தாம் வந்த நோக்கத்தைத் தொண்டைமானிடம் கூறவில்லை. ஆனால் அவன் ஔவையார் அதியமானின் தூதராக வந்திருக்கிறார் என்பதை ஒற்றர் மூலம் அறிந்திருந்தான். தன்னுடைய படைபலத்தை ஔவையாருக்குக் காட்டி அதன்மூலம் அதியமானை எச்சரிக்க விரும்பினான். எனவே தன் பெரிய படைக்கலக் கொட்டிலைக் காணவருமாறு ஔவையை வேண்டினான். ஔவையும் அவன் அழைப்பை மறுக்காமல் ஏற்றுப் படைக்கலக் கொட்டிலைக் காணச் சென்றார்.



படைக்கலக் கொட்டிலில் ஆயுதங்கள் எல்லாம் அவ்வவற்றுக்கான இடத்தில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. அவை துருப்பிடிக்காமல் இருக்க அவற்றின் மேல் நெய்பூசி , மயிற்பீலியும், மலர்மாலையும் சூட்டி அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தன. அவற்றை யெல்லாம் ஔவையாருக்குக் காட்டித் தன் படைபலத்தை மறைமுகமாக உணர்த்தினான். ஔவையாருக்கும் அவன் கர்வம் புரிந்தது.

தொண்டைமான் ஔவையாரிடம், " ஔவையே! என் படைக்கலங்கள் எல்லாம் எப்படி இருக்கின்றன? " என்று வினவினான். ஔவையாரும் அதற்கு மறுமொழியாக ஒரு பாடலைப் பாடினார்.

இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டி,
கண் திரள் நோன் காழ் திருத்தி, நெய் அணிந்து,
கடியுடை வியல் நகரவ்வே; அவ்வே,
பகைவர்க் குத்தி, கோடு, நுதி, சிதைந்து,
கொல் துறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து,
இல்லாயின் உடன் உண்ணும்,
இல்லோர் ஒக்கல் தலைவன்,
அண்ணல் எம் கோமான், வைந் நுதி வேலே.

**-(புறநானூறு 95)**

அதியமான் நெடுமான் அஞ்சி தூதுவிட தொண்டைமான் உழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கொட்டில் காட்ட ,ஔவையார் பாடியது.
இப்பாடலின் பொருள்:
'இங்கு உன் போர்க் கருவிகள் பாதுகாப்பாகப் படைக்கலக் கொட்டிலில் மயில் பீலி அணிவித்து, மாலை சூட்டப் பெற்று, கூர்முனை திருத்தம் செய்யப்பட்டு, அதில் துருப் பிடிக்காமல் இருக்க நெய் பூசப்பட்டு அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

அங்கு  என் தலைவன் அதியமான் பயன்படுத்திய வேல்கள் பகைவரைக் குத்தி, நுனி ஒடிந்தும் மழுங்கியும் சிதைந்து செப்பம் செய்வதற்காகக் கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன.

என் தலைவன் பொருள் இல்லாதவர்க்கு உறவுக்காரன். தன்னிடம் பொருள் இருக்கும்போது அதன் பயனைப் பிறருக்குக் கொடுத்து விடுவான் .
தன்னிடம் அதிகம் இல்லாத போது அவர்களோடு பங்கிட்டுக் கொண்டு உண்பான்' என்பது அப்பாடலின் பொருள். இந்தப் பாடலை மேலோட்டமாகப் பார்க்கும்போது ஔவையார் தொண்டைமானைப் புகழ்ந்தும், அதியமானைப் பழித்தும் கூறுவது போலத் தோன்றும்.



அதியனின் போர்க் கருவிகள் எப்போதும் கொல்லன் பட்டறையிலேயே இருக்கின்றன என்று கூறிய தன் மூலம் அவன் இடையறாது போரில் ஈடுபட்டு வருபவன் என்றும் , தொண்டைமானின் படைக்கருவிகள் எப்போதும் அழகாக அலங்கரிக்கப்பட்டுக் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டு இருப்பதால் தொண்டைமான் அதிகம் போர்ப்பயிற்சி இல்லாதவன் என்பதையும் மறைமுகமாக எடுத்துக் கூறுகிறார். இதைப் புரிந்துகொண்ட தொண்டைமானும் அதியமானுடனான போர்முயற்சியைக் கைவிட்டான்.

நல்ல இயல்பு உடையவர்களுடைய நட்பு நாள் ஆக ஆக வளர்ந்து கொண்டே போகும். பேதையர் நட்பு தேய்பிறை நிலவைப் போல் நலிந்துகொண்டே போய்ப் பின் இல்லாமல் போகும். முகமலர்ச்சியோடு பழகுபவர்கள் எல்லோரும் நண்பர்கள் ஆகிவிட மாட்டார்கள். உள்ளம் மகிழும்படி பழகுபவர்களே சிறந்த நண்பர்கள் ஆவார்கள். அதியமான் ஔவையார் நட்பு இந்த வகையைச் சார்ந்தது.

**திருமதி. ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்**



# கவிதைகள் சொல்லவா?

## விலகல் விதியே!




விலகியவர்கள் யாவரும்
விலக வேண்டியவர்கள்தான்;
விதியின் வழியில் வந்தவர்கள்
அதன் வழியிலே சென்றவர்கள்தான்!

நிழலாய் வந்து நின்றாலும்
நிலவாய் ஒளி தந்தாலும்,
காலம் அழைக்கும் கணமொன்றில்
காற்றாய் கடந்து போவார்கள்தான்!

மறையும் சூரியன் முடிவல்ல,
மறுநாள் விடியலின் விதை.
விலகல் என்பது முடிவில்ல
தொடங்கிய புதிய பாதை.

பிடித்ததை எல்லாம் பற்றிக் கொண்டால்
பயணம் கனத்துப் போய்விடும்;
விட்டவை ஏற்று முன்னே சென்றால்
விழுதலும் பாடமென விளங்கிவிடும்.

நிலையாமை தான் இயற்கையின் நெறி,
நினைவுகள் மட்டும் நிழலாய் நிற்கும்;
பற்றற்ற மனமே பேரமைதியின் வீடு,
அதை உணர்ந்தவனே உண்மையில் விடுதலை பெறுவான்!

வந்தவர் வருகை வரமென எண்ணு,
சென்றவர் நினைவை நன்றென எண்ணு;
எஞ்சிய காலம் இனிதென எண்ணி
எதிர்காலத்தை எழிலுடன் பின்னி!

நம் பயணம் முடிகையில்
நாமும் விலக வேண்டியவர்கள்தான்;
ஆனால் விலகும் நாள்வரை
விளக்காய் ஒளிர வேண்டியவர்கள்தான்!

விலகல் விதியே!
அதை வெல்வது ஏற்றுக்கொள்ளுதலே!
விலகும் எல்லா தருணங்களிலும்
விழித்தெழுவது வாழ்வின் வெற்றியே!



திரு. சுகுமாறன் மாரியப்பன்

## அம்மா





உயிர்ப்பித்தாய் என்னை, உயிர்த்தேன் உன்னால்!

என் துன்பம் இளைப்பாறப் படைத்தானோ உன் உருவம்?

அறிந்தேனே உன் அருமை, நான் சமைத்த முதல் ஊணில்!

கைப்பேசி தொடர்புகளில் உனக்கு என்றுமே முதலிடம் அடி!

உன் குருதி என் உணவாய், நான் பெற, என்ன தவம் செய்தேனோ?

மீண்டும் ஒரு யுகம் இருந்தால், என் மகளாய் நீ பிறக்க...இணையத்தில் உறவாடும் இப்பிறவியின் இருணத்தை, அப்பிறவியில் தீர்ப்பேனோ?

என் முதற் கடவுளுக்கு சமர்ப்பிக்கிறேன்

## நான் யார்???



மதிப்பிற்குரிய தந்தை/ மகன் /மகள் க்கு,

அன்பு, பரிவு, பாசம், இரக்கம், தியாகம் இவை மட்டுமோ நான்?

வெற்றி, வீரம், உயர்வு, போராளி என விவரிக்க வழி இல்லையோ?

பறந்து திரிய சிறகுண்டு, பலமில்லை(financial literacy)....

மனமுண்டு, ஊக்கம் இல்லை(family support)...

முயற்சி உண்டு, வழி புலப்படவில்லை(Path)...

தடைகள் மீறி சிகரம் தொட ஆசை உண்டு, ஏற்றிவிட எவர் உண்டோ?

ஏறிச் செல்ல நான் ஏணி மட்டுமா, நான் ஏற வழியில்லையோ?

கூட்டை ஆண்டது போதும், நாட்டை ஆள விரும்புகிறேன் தோள் கொடுங்கள் உறவுகளே!!!!

இப்படிக்கு,
நான் யார்??

திருமதி. தேவிப்பிரியா பிரவீன் பாபு


# என் பார்வையில் ...



வெ.இறையன்பு, இ.ஆ.ப. (பணி ஓய்வு) அவர்களின் ஏழாவது அறிவு என்னும் நூலை வாசித்த எனது அனுபவத்தை இங்கே பகிர்ந்து கொள்கிறேன்.

இந்நூலின் முதல் பாகத்தில் 70 கட்டுரைகளும், இரண்டாவது பாகத்தில் 75 கட்டுரைகளும், மூன்றாவது பாகத்தில் 75 கட்டுரைகளும் உள்ளன.

**ஏழாவது அறிவு** என்ற இந்த நூலில் வெ.இறையன்பு அவர்கள் மனிதனின் சிந்தனை, விழிப்புணர்வு, மனப்பக்குவம் மற்றும் வாழ்க்கையை அணுகும் விதம் குறித்து பல்வேறு கோணங்களில் சிந்திக்க வைக்கிறார். அறிவை வெறும் தகவலாக அல்லாமல், அனுபவம் மற்றும் உணர்வின் வழியாகப் புரிந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை இந்நூல் எடுத்துரைக்கிறது.
**மனிதன் உயர்வது அவன் பெற்ற அறிவால் அல்ல!**
**அந்த அறிவை வாழ்க்கையில் பயன்படுத்தும் விதத்தால்!!**



இந்நூல் வெறும் புத்தகம் அல்ல, ஒரு சிந்தனைப் பயணம். மனிதனுக்கு இயற்கை அளித்த ஐம்புலன்களைத் தாண்டி, சிந்திக்கும் திறன் அவனுக்கு ஆறாவது அறிவாக விளங்குகிறது. ஆனால் ஆறாவது அறிவையும் தாண்ட சிந்தனைகளற்ற நிலைக்குச் செல்ல வேண்டும். அது ஏழாவது அறிவாக உதயமாகிறது. ஏழாவது அறிவு என்பது அறிவு அல்ல.அனுபவம் - அப்போது இறைமையோடு இயைகிற அனுபவம் ஏற்படுகிறது.

அறிவைத் தேடும் பயணம், மனிதனை புத்திசாலியாக்கும். ஆனால் தன்னைத் தேடும் பயணம் அவனை ஞானியாக்கும்.இந்நூல் ஒரு தகவல் பெட்டகம். தமிழ் மற்றும் உலக இலக்கியங்களின் ஆழமான சிந்தனைகள்,அறிவியல் உண்மைகள், மேற்கோள்கள் என தகவல்களின் பெருங்கடலில் பயணிக்கும் போது இடையிடையே தோன்றும் சிறு நகைச்சுவைக் கதைகள், மனதை வருடும் மயில் இறகைப் போல மென்மையானவை. அவை சிரிப்பை மட்டும் தருவதில்லை. படிக்கும் பயணத்தை சலிப்பு ஏற்படா வண்ணம் இலகுவாகவும் இனிமையாகவும் மாற்றி, ஒவ்வொரு பக்கத்தையும் உயிர்ப்புடன் நகர்த்துகின்றன.

## புத்தகத்தில் இருந்து சில வரிகள்:



- மிகப்பெரிய மனிதர்களையெல்லாம்கூட அவர்கள் உணவு உண்ணும்போது அடையாளம் கண்டு கொள்ளலாம்.



- நுண்ணிய அறிவு இருப்பவர்களால்தான் உடனடியாகச் சிரிக்க முடியும்.

ஒரு தாய் எலி, மூன்று குட்டிகளுடன் சமையலறையில் புகுந்து உணவுப் பொருட்களைத் தின்றுகொண்டிருந்தது. அப்பொழுது ஒரு சந்து வழியாகப் பூனையொன்று அவற்றை எட்டிப் பார்த்து முன்னேறி வந்துகொண்டிருந்தது. உடனே தாய் எலி, 'உஃப், உஃப்' என்று நுரையீரலை இழுத்துக் கொண்டு துவாரத்தைப் பார்த்து உரக்கக் கத்தியது. பூனை பயந்து ஓடியது.தாய் எலி குட்டிகளுக்குச் சொன்னது : **"இன்னொரு மொழியைத் தெரிந்துகொள்வது எவ்வளவு நல்லது பார்த்தீர்களா?"**





**தாகூரின் ஒரு கவிதை :**

நான்
என் சுமையைப் பகிர்ந்துகொள்ள ஆள் தேடினேன்;
கிடைத்தான்
இப்போது
அவனையும் சேர்த்துச் சுமக்கிறேன்.



தாகூருடைய இந்தக் கவிதை வாழ்க்கையைப் பற்றிய ஓர் உயர்ந்த விமரிசனம். மகத்தான வாழ்க்கை என்பது சாதாரணமாக வாழ்வது. சாதாரணமாக வாழ்வது என்பது இயல்பாக வாழ்வது.பிரயத்தனங்கள் இன்றி வாழ்வது.

நாம் எவற்றைப் பாதுகாப்பு என்று நினைக்கிறோமோ அவைதான் நம்மைப் பாதுகாப்பின்மைக்கு அழைத்துச் செல்கின்றன. நம் ஒவ்வொரு சேமிப்பின் போதும், நாம் தொலைத்தவை நினைவுக்கு வருகின்றன.



குழந்தைப் பருவத்தில் குழந்தைத்தனத்தைத் தொலைத்தவர்கள் வாலிபப் பருவத்தில் குழந்தைத்தனத்துடன் நடந்து கொள்கிறார்கள். குழந்தை என்பது வெறும் பருவம் மட்டும் அல்ல. அது ஒரு குறியீடு.

பட்டாம்பூச்சியைப் பொறுத்தவரை, அது ஒரு விசித்திரமான கவிதை. பட்டாம்பூச்சி மட்டும் தான் 'வயோதிகம்' வாலிபத்தைக் காட்டிலும் அழகானது என்பதையும், முதிர்ச்சியே பூரணமானது என்பதையும் புரிய வைக்கிறது.
'Coming out with flying colours' என்கிற சொற்றொடர் பட்டாம்பூச்சிக்குத் தான் பொருந்தும்.




**"உதிர்ந்த பூ மறுபடியும்
மரக்கிளையில் ஒட்டிக்கொண்டது -
ஓ! பட்டாம்பூச்சி"** என்கிறது ஒரு ஹைக்கூ.

பட்டாம்பூச்சியும் ஒரு பூ. பூக்களின் மீது அமருகிற பூ. பட்டாம்பூச்சி மனிதர்களுக்குக் கற்றுத் தருகிறது - எப்படி வேரிலிருந்து பூக்களுக்குப் போவது என்பதை.எப்படி மௌனமாய்த் தவம் இருப்பது என்பதை - எப்படி வைராக்கிய விதைகளை விதைப்பது என்பதை.



கடுமையான காற்றிலும் புயலிலும் சேதப்படாத அதன் சிறகுகள் மனிதனின் கை பட்டால் நசுங்கி விடுகிறது. புயலிலும் கடுமையானவை மனிதனின் கைகள். காற்றிலும் மோசமானது சேதப்படுத்துகிற அவன் மனம்.



ஒரு வைரமும் கூழாங்கல்லும் சந்தித்தன. கூழாங்கல் வைரத்தைப் பார்த்துக் கேட்டது . "எப்பொழுதும் நீ பளபளப்பாக இருக்கிறாயே! உனக்கு மட்டும் எப்படி இது சாத்தியம்?" என்று கேட்டது. "நீ பளபளப்பாக இருப்பதாக நினைத்துக்கொண்டு பூமியின் மீது சகல நேரமும் கிடந்து பெருமைப்பட்டாய். நான் கருப்பாய் கரியாக இருந்த காரணத்தால், பூமிக்குள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் தவமிருந்தேன். அதற்குப் பரிசாய் இறைமை என்னை வைரமாக்கியது. இப்போது மேலே வந்துள்ளேன் என்றது.



வாழ்க்கையை ஆழமாகப் பார்க்கவும், மனப்பக்குவத்தை வளர்க்கவும் விரும்புபவர்கள் , முக்கியமாக இளைஞர்களுக்குப் புதிய சிந்தனையைத் தரும் நூலாக, ஒரு வழிகாட்டியாக இந்நூல் அமைகிறது.



திருமதி.திவ்யா சங்கரசுப்பிரமணியன்



# குழந்தைகள் கைவண்ணம்






செல்வன்.ஹர்ஷித் கார்த்திகேயன்



செல்வி. அகிரா வேல்முருகன்



# வேட்டை



மேற்குத் தொடர்ச்சி மலையின் அடர்ந்த காட்டுப்பகுதி. நள்ளிரவு நேரத்தில் பெய்த சாரல் மழையில் காடே நடுங்கிக் கொண்டிருந்தது. ராகுல் தன் கையில் இருந்த வரைபடத்தையும், காம்பஸையும் மாற்றி மாற்றிப் பார்த்தான். அவன் வழிதவறிவிட்டான் என்பது அவனுக்குப் புரிந்தது.

அவன் ஒரு **'புதையல் வேட்டைக்காரன்'** . பல ஆண்டுகளாகத் தேடிக்கொண்டிருந்த ஒரு பழங்காலக் கோவிலைக் கண்டுபிடிக்கவே இந்த ஆபத்தான பயணத்தை மேற்கொண்டிருந்தான். திடீரென்று, மரங்களுக்கு இடையே ஒரு மங்கலான வெளிச்சம் தெரிந்தது.



ராகுல் அந்த வெளிச்சத்தை நோக்கி ஓடினான். அங்கே சேதமடைந்த ஒரு கல் மண்டபம் இருந்தது. அதன் சுவர்களில் விசித்திரமான மனித உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. மண்டபத்தின் நடுவில் ஒரு பெரிய வெண்கல மணி தொங்கிக் கொண்டிருந்தது. பசியிலும் குளிரிலும் வாடிய ராகுல், அங்கிருந்த ஒரு கல் தூணின் ஓரத்தில் அமர்ந்தான்.
திடீரென்று அவனது “வாக்கி-டாக்கி” இயங்க ஆரம்பித்தது. வெறும் இரைச்சல் மட்டுமே கேட்டது. ராகுல் அதைச் சரிசெய்ய முயன்றபோது, ஒரு முதியவரின் குரல் தெளிவாகக் கேட்டது:**"தம்பி... அந்த மணியை மட்டும் அடிச்சிடாதே. அது விழித்துக்கொள்ளும்!"** ராகுல் திடுக்கிட்டு சுற்றும் முற்றும் பார்த்தான். அங்கே யாருமில்லை. "யார் இது? ஹலோ?" என்று கத்தினான். பதில் இல்லை.



அப்போது அவனுக்குப் பின்னால் ஏதோ ஒரு பெரிய உருவம் நகரும் சத்தம் கேட்டது. ராகுல் தனது டார்ச் லைட்டை அடித்தான். அந்த வெளிச்சத்தில் அவன் கண்ட காட்சி அவனது ரத்தத்தை உறைய வைத்தது. சுவரில் செதுக்கப்பட்டிருந்த அந்த மனித உருவங்களில் ஒன்று... இப்போது அங்கே இல்லை!
வெறும் காலியாக இருந்தது. மீண்டும் வாக்கி-டாக்கி ஒலித்தது: **"தம்பி, ஓடிவிடு! அது உன்னைப் பார்த்துவிட்டது. நீ எதைச் தேடி வந்தாயோ, அது ஒரு புதையல் அல்ல... அது ஒரு சிறை!"**



ராகுல் பயத்தில் அங்கிருந்து ஓட முயன்றான். ஆனால் மண்டபத்தின் வாசலில் ஒரு பிரம்மாண்டமான நிழல் நின்றது. அதன் கண்கள் நெருப்பு போல் ஜொலித்தன. தப்பிக்க வழியில்லை என்று தெரிந்ததும், தற்காப்பிற்காக ராகுல் அங்கிருந்த அந்தப் பெரிய வெண்கல மணியை ஓங்கி அடித்தான். **"டாங்...!!!" "டாங்...!!!" "டாங்...!!!"**

அந்த சத்தம் காடு முழுவதும் எதிரொலித்தது. அடுத்த நொடி, அந்த நிழல் உருவம் மறைந்தது. காடே அமைதியானது. ராகுல் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். "நல்லவேளை, அந்த முதியவர் சொன்னது பொய் போலிருக்கிறது. மணி அடித்தவுடன் அது ஓடிவிட்டது," என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

மெல்ல விடிந்தது. ராகுல் அங்கிருந்து வெளியேற தயாரானான். அப்போது மண்டபத்தின் சுவரைப் பார்த்தான். அங்கே இப்போது இரண்டு உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன.



ஒன்று ஏற்கனவே இருந்தது... இன்னொன்று, தத்ரூபமாக ராகுலைப் போலவே இருந்தது! அவனது முகபாவனை, அவன் கையில் இருந்த வரைபடம் வரை அப்படியே செதுக்கப்பட்டிருந்தது.அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது! அந்த மணி ஆபத்திலிருந்து காக்கும் கருவி அல்ல; யாராவது அதை அடித்தால், அவர்கள் அந்தச் சுவரில் சிலையாக மாறிவிடுவார்கள். இப்போது அந்த மண்டபத்தின் வாசலில் ஒரு புதிய உருவம் நின்றது.



வாக்கி-டாக்கியில் இப்போது ராகுலின் குரல் கேட்டது: "தம்பி... அந்த மணியை மட்டும் அடிச்சிடாதே!"

அவன் இப்போது அந்தச் சிறையின் புதிய காவலாளி. அடுத்த பலிக்காகக் காத்திருக்கத் தொடங்கினான்.



**திருமதி. ப்ரீத்தி வெ ராமன்**



# சிரிப்பும் சிந்தனையும் தரும் புதிர்கள்

**புதிர் 1:**

மகேஷின் அப்பாவுக்கு மூன்று மகன்கள் உள்ளனர்: சங்கர், அருண் மற்றும்...?



**பதில்:** மகேஷ்

**புதிர் 2:**

எந்தக் கேள்விக்கு நீங்கள் ஒருபோதும் "ஆம்" என்று பதிலளிக்க முடியாது?



**பதில்:** "நீங்கள் இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறீர்களா?"

**புதிர் 3:**

ஒரு மனிதன் மழையில் குடையோ தொப்பியோ இல்லாமல் வெளியே நின்றிருந்தான். ஆனால் அவன் தலையில் ஒரு முடியும் நனையவில்லை. ஏன்?



**பதில்:** அவன் வழுக்கைத் தலையன்."

**புதிர் 4:**

"இன்று" (Today) என்பது "நேற்று" (Yesterday) என்பதற்கு முன் எங்கே வருகிறது?




**பதில்:** அகராதியில்

**புதிர் 5:**

நீங்கள் பிடிக்க முடியும், ஆனால் எறிய முடியாத
என்ன?



**பதில்:** சளி (Cold).



**செல்வி. அஷ்மிதா ஷங்கர்**

# வாழ்க்கையை மாற்றும் சிறிய பழக்கங்கள்

## தினமும் 10 நிமிடங்கள்




பலருக்கு வெற்றி என்பது பெரிய முயற்சிகள், அதிக நேரம், கடின உழைப்பு என்று தோன்றலாம். ஆனால் உண்மையில், ஒரு நாளில் வெறும் 10 நிமிடங்கள் கூட நமது வாழ்க்கையை மாற்றும் சக்தி கொண்டது. அந்த 10 நிமிடங்களை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதே நமது நேர மேலாண்மையையும், வளர்ச்சியையும் தீர்மானிக்கிறது.

ஒரு மனிதனின் வாழ்க்கையை உயர்த்துவது, அவர் தினமும் கடைப்பிடிக்கும் வாழ்க்கை முறையே ஆகும். ஆரம்பத்தில் மிகச் சிறியதாகத் தோன்றும் இந்தப் பழக்கங்கள், காலப்போக்கில் பெரிய மாற்றங்களாக உருவெடுக்கின்றன.

ஒரு மனிதனின் வாழ்க்கையை உயர்த்துவது, அவர் தினமும் கடைப்பிடிக்கும் வாழ்க்கை முறையே ஆகும். ஆரம்பத்தில் மிகச் சிறியதாகத் தோன்றும் இந்தப் பழக்கங்கள், காலப்போக்கில் பெரிய மாற்றங்களாக உருவெடுக்கின்றன.

### 10 நிமிடத்தின் சக்தி:

ஒரு நாளில் 10 நிமிடங்கள் என்பது மிகவும் சிறியதாக தோன்றலாம். ஆனால் அதைத் தினமும் தொடர்ந்து செய்தால்:




- ஒரு வாரத்தில் 70 நிமிடங்கள்
- ஒரு மாதத்தில் 300 நிமிடங்கள்
- ஒரு வருடத்தில் 60 மணி நேரத்திற்கும் மேலாக மாறுகிறது.
- ஒருவர் இவ்வளவு மணிநேரம் ஒதுக்க முடிந்தால் , ஒரு நிறுவனத்தின் ஊழியர்கள் / தன்னார்வலர்களின் மொத்த நேரம் மற்றும் உற்பத்தித்திறன் அளப்பரியது.

இன்று தொடங்கப்படும் சிறிய மாற்றமே, நாளைய பெரும் வெற்றியின் அடித்தளமாக அமையும்.

### நேர மேலாண்மை – சிறிய முயற்சி , பெரிய விளைவு



நேரத்தை நிர்வகிப்பது என்பது அதிக நேரம் செலவிடுவது அல்ல! இருக்கும் நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துவது தான்.
பலர் ‘நேரம் போதவில்லை’ என்று நினைப்பது வழக்கம். ஆனால் உண்மையில், குறைந்த நேரத்தில் அதிக பலனைப் பெறும் திறமையே சிறந்த நேர மேலாண்மை ஆகும். நேரம் குறைவாக இருந்தாலும், அதனை செம்மையாகப் பயன்படுத்தினால், அது பெரும் பலனை அளிக்கும்.

தினமும் 10 நிமிடங்கள்:




- அன்றைய நாளைத் திட்டமிட
- செய்ய வேண்டிய பட்டியலை (To-Do List) அமைக்க
- முக்கிய பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க
- இ-மெயில் அனுப்ப அல்லது பதிலளிக்க
- உடன் பணிபுரிபவர்களுடன் கலந்துரையாட
- குறிப்புகள் எடுக்க
- முன்னேற்பாடுகளை (appointments) நினைவூட்ட

இவை அனைத்தும் நமது நாளை தெளிவாகவும் ஒழுங்காகவும் மாற்றும். தினமும் செய்ய வேண்டிய பணிகளை முன்கூட்டியே திட்டமிட்டு, அவற்றை முறையாக நிறைவேற்றுவது முன்னேற்றத்தை அளவிடக்கூடியதாக மாற்றுகிறது.

இவ்வாறான சிறிய முயற்சிகளே, நம்மைப் பெரிய இலக்குகளை நோக்கி முன்னேற்றுகின்றன.

## தலைமைத்துவத்தின் தொடக்கம் – தன்னிலிருந்து

ஒரு நல்ல தலைவர் பிறரை வழிநடத்துவதற்கு முன், தன்னைத்தானே வழிநடத்த வேண்டும். தினமும் 10 நிமிடங்கள் செலவழித்து:




- உங்கள் செயல்களை மதிப்பீடு செய்யுங்கள்.
- இன்று என்ன கற்றுக்கொண்டீர்கள் என்று சிந்தியுங்கள்.
- நாளை எப்படி சிறப்பாக செயல்படலாம் என்று திட்டமிடுங்கள்.

இந்த பழக்கம் உங்களை மெதுவாக ஒரு தலைவர் (Leader) ஆக மாற்றும்.

## பொறுப்புணர்வு மற்றும் ஒழுங்கு

ஏதேனும் ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன், அதனுடன் தொடர்புடைய பொறுப்பைத் தெளிவாக புரிந்து கொள்வது மிக அவசியம். பொறுப்புணர்வுடன் செய்யப்படும் செயல்கள் திட்டமிட்ட முறையில் தொடர்ந்து நடைபெறும். நாம் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும் நாமே பொறுப்பேற்கும் போது, நாமே நமக்கு ஒரு நல்ல தலைவராக மாறுகிறோம்.

தினசரி 10 நிமிட சிந்தனை:




- உங்கள் செயல்களுக்கு நீங்கள் பொறுப்பு ஏற்க உதவும்.
- உங்கள் இலக்குகளை நினைவூட்டும்.
- உங்கள் முன்னேற்றத்தைக் கண்காணிக்க உதவும்.

இதுவே உண்மையான தலைமைத்துவத்தின் அடிப்படை.

புகழ்பெற்ற முதலீட்டாளர் வாரன் பஃபெட் (Warren Buffett) தனது நேரத்தை மிகவும் கவனமாக நிர்வகிப்பவர். அவர் சொல்வது என்னவென்றால், **நீங்கள் உங்கள் காலண்டரை கட்டுப்படுத்தவில்லை என்றால், அது உங்களை கட்டுப்படுத்தும்**.எவ்வித இடையூறுகளும் இல்லாத நேரமே சிறந்த முடிவுகளை




எடுக்க உதவும் என்று அவர் நம்புகிறார். அதனால் தான் அவர் தனது நாட்காட்டியில் எந்தவொரு தேவையற்ற கூட்டங்களையும் குறித்து வைப்பதில்லை. "என்னிடம் எவ்வளவு பணம் இருந்தாலும் நேரத்தை என்னால் விலைக்கு வாங்க முடியாது" என்பது வாரன் பஃபெட்டின் ஆழமான கூற்று. தேவையற்ற கூட்டங்கள், மேலாண்மை ஆலோசனைகள் மற்றும் நிகழ்வுகளைத் தவிர்ப்பதன் மூலம் தன் நேரத்தை அவர் முழுமையாகப் பாதுகாக்கிறார்.

## தன்னம்பிக்கை மற்றும் ஊக்கம்




நாம் தினமும் ஒரு சிறிய செயலைத் தொடர்ந்து செய்து வந்தால்:

- தன்னம்பிக்கையை உயர்த்தும்.
- நேர மேலாண்மையை மேம்படுத்தும்.
- பெரிய ஊக்கத்தை (Motivation) தரும்.
- தலைமைத்துவத் திறனை(Leadership Skill) வளர்க்கும்.

**இன்று முதல் தினமும் 10 நிமிடங்கள் ஒதுக்குங்கள். நாளை அது உங்கள் வாழ்க்கையை மாற்றும்.**






**திரு.அருண்பிரசாத் ரெங்கசாமி**

# வாழ்க்கையை மாற்றும் சிறிய பழக்கங்கள்



பழக்கங்களால் சூழ்ந்ததுதான் நம் வாழ்க்கை. நாம் தினசரி கடைப்பிடிக்கும் பழக்கங்கள் தான் நாம் யார் என்று தீர்மானிக்கும். நல்ல பழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டால் காலப்போக்கில் பெரிய மாற்றங்கள் உண்டாகும். **“சிறு துளி பெரு வெள்ளம்”** என்பது போல் சிறிய சிறிய நல்ல பழக்கவழக்கங்கள் நாளடைவில் பெரிய பெரிய மாற்றங்களை உருவாக்கும். அவை மெதுவாக நம் எண்ணங்களையும், செயல்களையும், வாழ்க்கை முறையையும் மேம்படுத்தும். வாழ்க்கையை மாற்றும் முதல் பழக்கம் செயலில் அல்ல நம் சிந்தனையில் தொடங்குகிறது. மாற்றங்கள் ஒரே நாளில் நிகழ்வதில்லை; எனவே, நேர்மறை எண்ணங்களுடன் ஒவ்வொரு நாளையும் தொடங்க வேண்டும், என்னால் முடியும் என்ற நம்பிக்கையோடு தொடரவேண்டும். தன்னை நம்புபவன் என்றும் சோர்வடைய மாட்டான். அதே நேரம், இலக்கு இல்லாமல் தொடங்கும் முயற்சி திசைகாட்டி இல்லாத கப்பல் போன்றது, அதனால் இலக்கு நிர்ணயம் மிக தேவையான ஒன்று.


**சில உதாரணங்கள்:**

### அதிகாலையில் எழுவது



அதிகாலை எழுவது என்பது இன்றைய வாழ்க்கை முறையில் ஒரு சவாலாக உள்ளது. ஆனால் அதிகாலையில் எழுவது அன்றைய தினத்தை அமைதியாகத் தொடங்க உதவும். இதன் மூலம் அன்றைய நாளை அழகாகத் திட்டமிடலாம். உணவை அவசரமில்லாது உண்ணலாம். அதனால் உடல் அதன் வேலைகளை எளிதாக செய்யும். இரவில் சரியான நேரத்திற்கு உறங்கவும் முடியும். மேலும் மறுநாளை மீண்டும் புத்துணர்ச்சியுடன் தொடங்கலாம்.

### வாசித்தல்



தினத்தோறும் ஒரு 15 நிமிடங்கள் வாசிப்பதற்குச் செலவிடலாம் . இது நம் அறிவை மேம்படுத்தும், சிந்திக்கும் திறனையும் வளர்க்கும். புதிய கருத்துகளை அறிந்துகொள்வதற்கும், அறிவியல் வளர்ச்சியையும் அறிந்துகொள்வதற்கும் வாசிப்பு அவசியம்.

### உடற்பயிற்சி



தினமும் ஏதேனும் ஒரு உடற்பயிற்சியைப் பழகவேண்டும். இது உடல் ஆரோக்கியத்திற்கு உதவுவது மட்டுமல்லாது மன அமைதியையும் தரும். மனம் நலமாக இருந்தால்

நேர்மறை எண்ணங்கள் மனத்தில் உருவாகும். இது வாழ்க்கை சீராகச் செல்ல உதவும்.

## தண்ணீர் அருந்துதல்



என்ன தண்ணீர் குடிப்பதா? என்ற கேள்வி வரலாம். இந்தப் பழக்கம் பல உடல் நலப் பிரச்சனைகளைத் தவிர்க்கும் ஒரு ஆரோக்கியமான பழக்கம் ஆகும். மேலும் நம்மைப் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும்.

## திரை நேரத்தைக் குறைத்தல்




இன்றைய சூழ்நிலையில் நாம் அலைபேசி அல்லது தொலைக்காட்சி அல்லது கணினியுடன் தான் மிக அதிக நேரம் இருக்கிறோம். இதனைச் சற்று குறைத்துக் கொள்ள வேண்டும். அந்த நேரத்தை நம் குடும்பம் மற்றும் உறவினர்கள், நண்பர்களுடன் செலவிடலாம். உரையாடல்கள் மூலம் புதிய சிந்தனை உருவாகும். மனச் சுமை குறையும்.இதனால் உறவுகள் பலமாகும்.

## ஒரு புன்னகை



ஆம், நாம், நம்மைக் கடந்து செல்பவர்களிடமும், சந்திப்பவர்களிடமும் சிறு புன்னகை ஒன்றைப் பகிர்வோம். இது மனதிற்கு ஒரு நேர்மறை அதிர்வைத் தரும். இதனால் அன்றைய சூழலும் இனிமையாகும்.

## அமைதியாக இருத்தல்




ஒரு நாளில் ஒரு பத்து நிமிடங்களை உங்களுக்கு எனச் செலவிடுங்கள். அதாவது, சும்மா இருங்கள். ஆம் அலைபேசி, தொலைக்காட்சி, புத்தகங்கள் எதுவும் இல்லாமல் நீங்கள் உங்களுடன் இருங்கள். இது உங்களுக்குள் ஒரு பெரிய மாற்றத்தை மெதுவாக உருவாக்கும்.

## மன்னிப்புக் கேட்டல்




தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்கும் சிறு பழக்கம் மனிதனின் பணிவையும், முதிர்ச்சியையும் வெளிப்படுத்தும். மன்னிப்புக் கேட்பது என்றும் நம்மைச் சிறுமைப்படுத்தாது; மாறாக மன அமைதியையும், நம்பிக்கையையும் வளர்க்கும்.

## சிறு சேமிப்பு




சிறு சேமிப்பு ஒரு பெரிய பாதுகாப்பு. எறும்பு தினமும் சிறிது சிறிதாக உணவைச் சேமித்து மழைக்காலத்தில் பாதுகாப்பாக வாழ்கிறது. சம்பாதிப்பது திறமை; சேமிப்பது அறிவு.

## நன்றியுணர்வு

நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.




நமக்குக் கிடைத்த உதவியை மறக்காமல் இருப்பது தான் நன்றியுணர்வு. நன்றி எதிர்பார்க்காமல் உதவி செய்வது உயர்ந்த பண்பு; ஆனால் கிடைத்த உதவிக்கு நன்றி உரைப்பது அதனினும் சிறந்த பண்பு. நன்றி சொல்லத் தெரிந்த மனம் என்றும் மகிழ்ச்சியாக இருக்கும், இன்று தொடங்கும் ஒரு சிறிய நல்ல பழக்கம், நாளைய மாற்றத்தின் விதையாக இருக்கும்.

வாழ்க்கையில் வெற்றிகளைப் பெறப் பெரிய செயல்கள் தான் செய்யவேண்டும் என்பது இல்லை. தினந்தோறும் நாம் செய்யும் பின்பற்றும் நல்ல பழக்கங்களே காலப்போக்கில் பெரிய மாற்றங்களை உருவாக்கும்.







**“தொடர்ந்த முயற்சி வெற்றியின் திறவுகோல்”**. நாம் மீண்டும் மீண்டும் செய்யும் ஒரு செயலானது நம் இயல்பாகிறது. ஒரு மாணவன் தினமும் படிப்பதால் தேர்வு நேரத்தில் அதிகச் சுமை அவனுக்கு இருக்காது. ஒரு சிறு செடிக்கு தினமும் நீர் ஊற்றுவதால் அது வளர்ந்து பயன் தரும். தினமும் ஒரு புதிய தமிழ்ச் சொல் கற்றுக்கொண்டால் ஒரு ஆண்டில் 365 புதிய சொற்கள் கற்றுக்கொள்ளலாம்.



**மலை உயர்ந்தது ஒரு கல்லால் அல்ல; வாழ்க்கை உயர்வதும் ஒரு செயலால் மட்டுமே அல்ல.** தினமும் கடைப்பிடிக்கும் சிறிய நல்ல பழக்கங்களால் தான் பெரிய மாற்றங்கள் மலர்கின்றன.



**திருமதி.வனதுர்கா வெங்கடேஸ்வரன்**

# இராமாயணம் காட்டும் வாழ்க்கைப் பாடங்கள்



**வீரன் என்றால் வெற்றி பெறுபவன் மட்டும் அல்ல; சரியானதைத் தேர்ந்தெடுப்பவனும் வீரன்தான்."**
இந்த எண்ணத்தை நமக்கு வாழ்ந்து காட்டியவர் **ஸ்ரீ ராமர்**.

ராமாயணம் என்பது ஒரு பழமையான இதிகாசம் மட்டுமல்ல. அது மனித வாழ்க்கையைப் புரிந்துகொள்ள உதவும் ஒரு வழிகாட்டி.

இன்று உலகம் வேகமாக மாறுகிறது. தொழில்நுட்பம் வளர்கிறது. வாய்ப்புகள் பெருகுகின்றன. ஆனால் உண்மை, நேர்மை, பொறுப்பு, அன்பு போன்ற மதிப்புகள் மட்டும் ஒருபோதும் பழமையாகிவிடுவதில்லை. அவற்றை வாழ்வில் எப்படி கடைப்பிடிக்கலாம் என்பதை இராமர் தனது வாழ்க்கையால் உணர்த்துகிறார்.

## உண்மை – எப்போதும் நிலைத்திருக்கும் பலம்



இராமரின் மிகப் பெரிய அடையாளம் அவரது உண்மைத்தன்மை. அரசராக முடிசூட வேண்டிய நாளில், தந்தை தசரதர் கைகேயிக்கு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக, எந்தக் குறையும் கூறாமல் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்லத் தயங்கவில்லை. அவருக்குக் கிடைக்க வேண்டிய அரசாட்சியை விட, தந்தையின் சொல் மற்றும் உண்மைக்கு அவர் அதிக மதிப்பு கொடுத்தார். இன்று நம் வாழ்க்கையிலும் இதே கேள்வி அடிக்கடி வருகிறது. சிறிய பொய்யைச் சொல்லித் தப்பிக்கலாமா, அல்லது உண்மையைச் சொல்லி பொறுப்பை ஏற்கலாமா? உண்மை சில நேரங்களில் கடினமாக இருக்கலாம். ஆனால் அது நம்பிக்கையை உருவாக்கும். நம்பிக்கையே நல்ல உறவுகளுக்கும் நல்ல சமுதாயத்திற்கும் அடித்தளம்.

## தர்மம் – எளிதான பாதை அல்ல, சரியான பாதை



இராமரின் வாழ்க்கையை வழிநடத்தியது தர்மம். தனக்குரிய அரியணையை மீட்டெடுக்க அவர் அவசரப்படவில்லை. பரதன் மீது எந்தப் பொறாமையும் கொள்ளவில்லை. அதிகாரத்தை விட உறவையும் நீதியையும் உயர்வாகக் கருதினார். வாழ்க்கையில் பல நேரங்களில் இரண்டு பாதைகள் நம் முன் நிற்கும். ஒன்று எளிதானது. மற்றொன்று சரியானது. எளிதானதைத் தேர்ந்தெடுப்பது உடனடி பலனைத் தரலாம். ஆனால் சரியானதைத் தேர்ந்தெடுப்பதே நீண்ட கால வெற்றியையும் மனநிம்மதியையும் தரும்.

## கடமை – நம்முடைய பொறுப்பை முழுமையாக நிறைவேற்றுதல்



இராமர் எந்தச் சூழ்நிலையிலும் தனது கடமையை மறக்கவில்லை. ஒரு மகனாக தந்தையின் வாக்கை காத்தார். ஒரு கணவராக சீதையை மீட்கப் போராடினார். ஒரு அரசராக மக்களின் நலனை முதன்மைப்படுத்தினார். ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை இருக்கிறது. மாணவருக்கு படிப்பு,பெற்றோருக்கு பிள்ளைகளை வழிநடத்துதல், நண்பர்களுக்குள் நம்பிக்கை, சமூகத்தின் மீது பொறுப்பு—இவை அனைத்தும் நம் கடமைகளே. பெரிய சாதனைகள் பல நேரங்களில், சிறிய பொறுப்புகளை நேர்மையாக நிறைவேற்றுவதிலிருந்தே தொடங்குகின்றன.

## தைரியம் – பயமின்மை அல்ல, பயத்தைத் தாண்டிச் செயல்படுதல்



இராமர் ஒரு சிறந்த வீரர். ஆனால் அவரது தைரியம் போர்க்களத்தில் மட்டுமல்ல. காட்டில் வாழ்ந்த காலம், பல சவால்களை எதிர்கொண்ட தருணங்கள், இராவணனுடன் நடந்த யுத்தம்—ஒவ்வொன்றிலும் அவர் அமைதியையும் உறுதியையும் காத்தார். தைரியம் என்பது பயமே இல்லாமல் இருப்பது அல்ல. பயம் இருந்தாலும் சரியானதைச் செய்வதே உண்மையான தைரியம். தேர்வு, புதிய முயற்சி, தோல்வி, வாழ்க்கை மாற்றங்கள்—எதுவாக இருந்தாலும், துணிவுடன் எதிர்கொள்வதே வளர்ச்சியின் முதல் படி.

## கருணை – வலிமைக்கு அழகு சேர்ப்பது



இராமரின் வலிமையை இன்னும் உயர்வாக மாற்றியது அவரது கருணை. அனுமனின் பக்தியையும் விசுவாசத்தையும் அவர் மதித்தார். அனைவரிடமும் மரியாதையுடன் நடந்துகொண்டார். மனிதர், வானரர், அரசர், சாதாரண மக்கள்—யாராக இருந்தாலும் சமமாக அணுகினார். ஒருவருக்கு உதவுவது எப்போதும் பெரிய செயலாக இருக்க வேண்டியதில்லை. ஒரு நல்ல வார்த்தை, ஒரு ஊக்கம், ஒரு சிறிய உதவி—இவை கூட ஒருவரின் நாளை மாற்றக்கூடியவை. கருணை என்பது பலவீனம் அல்ல; அது உயர்ந்த மனிதநேயம்.

## பெரியோருக்கு மரியாதை, குடும்பத்திற்கு அர்ப்பணிப்பு



இராமரின் வாழ்க்கையில் குடும்ப உறவுகள் மிகவும் முக்கியமானவை. தந்தையின் விருப்பத்தை மதித்தார். சீதையின் மீது அன்பும் பொறுப்பும் கொண்டிருந்தார். இலக்குவனுடன் உறுதியான சகோதர பாசத்தை வெளிப்படுத்தினார்.

இன்றையவேகமான வாழ்க்கையிலும் குடும்பம் நமக்கு வலிமை தரும் முதல் இடம். பெரியவர்களின் அனுபவத்தை மதிப்பது, பெற்றோருக்கு நன்றி கூறுவது, உடன்பிறப்புகளை ஆதரிப்பது, நண்பர்களை அக்கறையுடன் நடத்துவது—இவை அனைத்தும் வாழ்க்கையை வளப்படுத்தும் பண்புகள்.

## இராமர் நமக்கு ஏன் இன்னும் பொருத்தமானவர்?

இராமர் வாழ்ந்த காலமும் இன்றைய காலமும் வேறுபட்டவை. ஆனால் மனித மனம் எதிர்கொள்ளும் சவால்கள் பெரிதாக மாறவில்லை. இன்றும் நாம் உண்மைக்கும் பொய்யுக்கும் இடையில் தேர்வு செய்கிறோம். இன்றும் எளிதான வழிக்கும் சரியான வழிக்கும் இடையில் நிற்கிறோம். இன்றும் பொறுப்பு, தைரியம், அன்பு, மரியாதை ஆகியவை நம்மைச் சிறந்த மனிதர்களாக மாற்றுகின்றன. அதனால்தான் இராமரின் வாழ்க்கை வெறும் வரலாறு அல்ல; ஒவ்வொரு தலைமுறைக்கும் பொருந்தும் ஒரு வாழ்வியல் பாடமாகத் திகழ்கிறது. இராமரைப் பின்பற்றுவது என்பது காட்டுக்குச் செல்வதோ அல்லது வில்லேந்திப் போராடுவதோ அல்ல. உண்மையைப் பேசுவது, தர்மமான முடிவுகளை எடுப்பது, நம் கடமையைச் செய்வது, தைரியமாக நிற்பது, பிறரிடம் கருணையுடன் நடப்பது, குடும்பத்தையும் பெரியவர்களையும் மதிப்பது—இவையே இராமரின் உண்மையான வழியைப் பின்பற்றுவது. வாழ்க்கை நமக்கு தினமும் பல தேர்வுகளைத் தருகிறது. அந்தத் தேர்வுகளில் நல்ல மனிதராக இருக்க உதவும் ஒளிக்கோலாக இராமரின் வாழ்க்கை என்றும் நம்மை வழிநடத்தும்.







**செல்வி.அதிதி முத்துகுமார்**

# காலியான நாற்காலி

நடந்து கொண்டிருக்கும் போது, சாதாரண தருணங்களின் மதிப்பை நாம் பெரும்பாலும் உணருவதில்லை.



ஒருநாள் அம்மா கீழே வந்து சாப்பிட அழைக்கும் குரலுக்காக நீங்கள் ஏங்குவீர்கள் என்பதை அப்போது அறிய மாட்டீர்கள். பள்ளிக்குச் செல்லும் வழியில் அப்பா தினமும் அதே கேள்விகளை கேட்பதை ஒருநாள் நினைத்து வருந்துவீர்கள் என்பதையும் உணர மாட்டீர்கள். வகுப்பறையில் உங்களுடன் அமர்ந்திருக்கும் நண்பர்கள் எப்போதும் உங்களுடன் இருக்க மாட்டார்கள் என்பதையும் புரிந்து கொள்ள மாட்டீர்கள்.





ஏனெனில் வாழ்க்கை இயல்பாக இருக்கும்போது, அது என்றென்றும் அப்படியே இருக்கும் என்று நாம் நினைத்துக் கொள்கிறோம்.

ஆனால் ஒருநாள் அது மாறிவிடுகிறது.

சிலருக்கு அது வேறு இடத்திற்குச் செல்லும் போது நடக்கலாம். சிலருக்கு ஒரு நட்பு மெதுவாக விலகும் போது நடக்கலாம். சிலருக்கு மிகவும் நேசித்த ஒருவர் உங்கள் அழைப்பிற்கு பதிலளிக்க முடியாத நிலை வரும் போது நடக்கலாம்.


எதுவாக இருந்தாலும், ஒருநாள் முக்கியமான ஒருவருக்குச் சொந்தமான ஒரு காலி நாற்காலியை நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பீர்கள்.



அப்போது தான் உங்களிடம் இருந்தவற்றின் உண்மையான மதிப்பு புரியும்.

அந்தச் சிறிய விஷயங்கள் நினைவிற்கு வரும்.

அப்போது மிகவும் முக்கியமாகத் தோன்றிய வாக்குவாதங்கள் இப்போது அர்த்தமற்றதாகத் தெரியும். நீங்கள் பதிலளிக்காத குறுஞ்செய்திகள் மீண்டும் பெற முடியாத உரையாடல்களாக மாறிவிடும். அவசரமாக கடந்து சென்ற தருணங்கள், இன்னும் ஐந்து நிமிடங்களாவது மீண்டும் வாழ முடியுமா என்று ஏங்க வைக்கும் நினைவுகளாக மாறும்.



குடும்பத்தினர் அனைவரும் ஒருவரை ஒருவர் முந்தி பேசிக் கொண்டிருந்த இரவு உணவு நேரம் நினைவிற்கு வரும். அப்போது அங்கிருந்து எழுந்து உங்கள் அறைக்குச் செல்லவே விரும்பினீர்கள்.

இப்போது அந்த சத்தத்தை இன்னொரு முறை கேட்க எதையும் செய்யத் தயாராக இருப்பீர்கள்.

தாத்தா, பாட்டி மீண்டும் மீண்டும் அதே கதைகளைச் சொன்னது நினைவிற்கு வரும்.

நீங்கள் கைப்பேசியைப் பார்த்துக் கொண்டே கேட்டது போல நடித்ததையும் நினைவுகூர்வீர்கள்.

இப்போது அந்தக் கதைகளை இன்னொரு முறை கேட்க முடிந்தால், மணிக்கணக்காக அமர்ந்திருப்பீர்கள்.

வாழ்க்கை ஒரே நேரத்தில் உங்கள் இதயத்தை உடைப்பதில்லை.



சில நேரங்களில் அது மெதுவாக உடைக்கிறது.

ஒரு நண்பர் வேறு பள்ளிக்குச் செல்கிறார்.

ஒரு சகோதரன் அல்லது சகோதரி வேறு இடத்திற்கு செல்கிறார்.



அம்மா, அப்பா வயதாகிறார்கள்.

நீங்கள் வளர்ந்த வீடு விற்கப்படுகிறது.

அப்போது தான் உங்கள் வாழ்க்கையை உருவாக்கிய மனிதர்களும் இடங்களும் நிரந்தரமானவை அல்ல என்பதை உணர்கிறீர்கள்.

அதில் மிகவும் கடினமான விஷயம் என்னவென்றால், உலகம் தொடர்ந்து நகர்ந்து கொண்டே இருக்கும்.

பேருந்துகள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.


பள்ளி மணி தொடர்ந்து ஒலிக்கும்.

நடைவழிகளில் மக்கள் தொடர்ந்து சிரித்துக் கொண்டே இருப்பார்கள்.

சூரியன் ஒவ்வொரு காலையிலும் உதித்துக் கொண்டே இருக்கும்.

ஆனால் எப்படியோ, உங்கள் உலகம் மட்டும் முற்றிலும் மாறிவிட்டது போலத் தோன்றும்.

பிறகு நீங்கள் முன்பு கவனிக்காத விஷயங்களை கவனிக்கத் தொடங்குவீர்கள்.



குடும்பச் சந்திப்புகளில் இருக்கும் காலியான இருக்கை.

உங்கள் தொலைபேசியில் திறக்கப்படாத ஒரு தொடர்பு.

இனி வராத பிறந்தநாள் வாழ்த்துச் செய்திகள்.


ஒருகாலத்தில் இருந்த குரல் இப்போது இல்லாத அமைதி.

சில காலம் அது தாங்க முடியாத வேதனையாக இருக்கும்.

ஆனால் பின்னர் எதிர்பாராத ஒன்று நடக்கும்.

தாங்கிக் கொள்வது என்பது மறந்து விடுவது அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.
அன்பை முன்னோக்கி எடுத்துச் செல்வதுதான் உண்மையான தாங்கும் சக்தி.

உங்களை வடிவமைத்த மனிதர்கள் உண்மையில் ஒருபோதும் மறைந்து போவதில்லை. அவர்கள் உங்களுக்கு கற்றுக் கொடுத்த பழக்கங்களில் வாழ்கிறார்கள். நீங்கள் அறியாமல் மீண்டும் கூறும் வார்த்தைகளில் வாழ்கிறார்கள். எதிர்பாராத நேரங்களில் தோன்றும் நினைவுகளில் .



ஒருநாள் நீங்கள் ஒரு நகைச்சுவையில் சிரிக்கும் போது, உங்கள் சிரிப்புடன் அவர்களின் சிரிப்பும் கலந்திருப்பதை உணர்வீர்கள்.

ஒருவருக்கு உதவும்போது, அவர்கள் உங்களுக்கு உதவிய விதமே உங்கள் செயலில் இருக்கும்.

அவர்கள் கூறிய கதையை நீங்கள் மற்றொருவரிடம் சொல்லிக் கொண்டிருப்பீர்கள்.

அந்த நொடியில், அவர்கள் இன்னும் உங்கள் அருகிலேயே இருப்பது போலத் தோன்றும்.

ஒருவேளை அதுதான் வாழ்க்கையை தாங்கிக் கொள்வதன் உண்மையான அர்த்தமாக இருக்கலாம்.

இழப்பு வலிக்கவில்லை என்று நடிப்பது அல்ல.

நீங்கள் நன்றாக இருக்கிறீர்கள் என்று பொய் சொல்வது அல்ல.

வலியோடு இருந்தாலும் வாழ்வதைத் தேர்ந்தெடுப்பதுதான்.

ஏனெனில் உண்மை என்னவென்றால், உங்களை நேசித்தவர்கள் உங்கள் கதை உங்கள் வலியோடு முடிவடைவதை ஒருபோதும் விரும்ப மாட்டார்கள்.

அவர்கள் நீங்கள் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்று விரும்புவார்கள்.

தொடர்ந்து கனவு காண வேண்டும்.

தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்.

தொடர்ந்து அன்பு செலுத்த வேண்டும்.

ஆகையால், அந்த காலியான நாற்காலியை நோக்கி அமர்ந்து, நீங்கள் இழந்த அனைத்தின் பாரத்தையும் உணரும் போது இதை நினைவில் கொள்ளுங்கள்:

நாற்காலி காலியாக இருக்கலாம்.

ஆனால் ஒருகாலத்தில் அதை நிரப்பிய அன்பு ஒருபோதும் விட்டுச் செல்லவில்லை.

நீங்களும் அப்படியே விட்டுச் செல்லக் கூடாது.



**செல்வி. யாழிசை சந்திரா ஸ்ரீதர்**

# குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & குறிஞ்சி கல்விக்கூடம் குழந்தைகள் திறமையை வெளிப்படுத்தும் விழா

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & குறிஞ்சி கல்விக்கூடத்தின் குழந்தைகள், தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் நோக்கில் சங்கம் மற்றும் கல்விக்கூடத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழா மே-9ஆம் தேதி சனிக்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வு, குழந்தைகளின் படைப்பாற்றல், தன்னம்பிக்கை மற்றும் தமிழ்க் கலாச்சாரப் பெருமையை வெளிப்படுத்தும் ஒரு இனிய மேடையாக அமைந்தது.
குழந்தைகள் தங்களது பல்வேறு திறமைகளை வெளிக்கொணரும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், இனிமையான பாடல்கள், திருக்குறள் சொல்லுதல், நடனங்கள், இசைக்கருவி வாசிப்பு, நகைச்சுவை போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.













தங்களின் திறமைகளை அரங்கேற்றிய மாணவர்களின் முயற்சிகளும் சாதனைகளும் பாராட்டப்பட்டன. மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கலந்து கொண்ட இந்த நிகழ்வு, திறமை, உற்சாகம் மற்றும் தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை கொண்டாடும் மறக்க முடியாத நிகழ்வாக அமைந்தது.

# குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கத்தின் யோகா தினம் மற்றும் தந்தையர் தினக்கொண்டாட்டம்

கடந்த ஜூன் மாதம் 21-ஆம் தேதி குறிஞ்சி முத்தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் யோகா தினம் மற்றும் தந்தையர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குறிஞ்சி முத்தமிழ் சங்க உறுப்பினர்கள் குறிப்பாகக் குழந்தைகள் யோகா மற்றும் விளையாட்டுகளில் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். ஆரோக்கியத்தை முன்னிறுத்தும் வகையில் அமைந்த இந்த நிகழ்வு, பங்கேற்பாளர்களுக்கு இனிய அனுபவமாக அமைந்தது.

இந்த நாள், உலக யோகா தினத்தை முன்னிட்டு, திருமதி. ரேவதி சுகுமாரன் அவர்கள் வழிநடத்திய யோகா நிகழ்வுடன் தொடங்கியது. உடல் ஆரோக்கியம், மன அமைதி மற்றும் விழிப்புணர்வை வளர்க்கும் வகையிலும், அனைவருக்கும் புத்துணர்ச்சியையும் உற்சாகத்தையும் அளிக்கும் வகையிலும் இருந்தது.





அதனைத் தொடர்ந்து நடைபெற்ற தந்தையர் தினக் கொண்டாட்டம், குடும்பப் பாசத்தின் இனிமையை வெளிப்படுத்தியது. குழந்தைகள் தங்கள் அப்பாக்களுடன் இணைந்து கொண்டாடிய இந்த நிகழ்வு, அன்பும் நன்றியுணர்வும் நிறைந்த தருணங்களை உருவாக்கியது.அப்பாக்களுக்கு மகிழ்ச்சியையும் மறக்க முடியாத நினைவுகளையும் வழங்கியது.








மேலும், குழந்தைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புதையல் வேட்டை என்னும் குறிப்புகளைத் தொடர்ந்து தேடும் விளையாட்டு, ஆர்வத்தை வளர்க்கும் வகையில் சுவாரஸ்யமான தேடல் பயணமாக அமைந்தது. சிந்தனைத் திறனை ஊக்குவித்த இந்த நிகழ்ச்சி, உற்சாகத்துடன் கற்றலையும் இணைத்தது.

யோகா தினமும் தந்தையர் தினமும் ஒன்றாகக் கொண்டாடப்பட்ட இந்த நிகழ்வு, ஆரோக்கியம், அன்பு மற்றும் மகிழ்ச்சி ஒன்றிணைந்த ஒரு சிறப்புத் தருணமாக அமைந்தது.

# விளையாட்டு, கதைகள், தமிழ்ப் பண்பாட்டு உணர்வுடன் ஒரு கோடைகாலம் - குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் கோடை முகாம் 2026

இந்த கோடையில், குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கத்தின் குழந்தைகள் திரை நேரத்தைத் தவிர்த்து, விளையாட்டு, கற்றல், படைப்பாற்றல் மற்றும் குழு ஒருங்கிணைப்பை வளர்க்கும் பல்வேறு செயல்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை காலைப் பொழுதுகளில் தொடர்ந்து நடைபெற்ற, தமிழ்ப் பண்பாட்டை மையமாகக் கொண்ட ஒவ்வொரு புதிய கருப்பொருளுடனான செயல்பாடுகளில் அவர்கள் ஒன்று கூடி விளையாடினர், கற்றுக்கொண்டனர்.

சில வார இறுதி நிகழ்ச்சிகளாகத் தொடங்கிய இந்த எளிய முயற்சி, குழந்தைகளின் மனதில் என்றும் நிலைத்திருக்கும் ஒரு இனிய கோடைகால அனுபவமாக வளர்ந்தது.

## விளையாட்டு நாள் :

மூன்று மணி நேரம் உற்சாகம் நிறைந்த பல்வேறு விளையாட்டுகளுடன் தொடங்கியது. உள்ளரங்கு விளையாட்டில், பரமபதம் சிறுவர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இளைஞர்கள் பல்லாங்குழி விளையாட்டில் ஆர்வத்துடன் ஈடுபட்டு, சுவாரஸ்யமான போட்டி நிறைந்த ஆட்டங்களை நடத்தினர்.

வெளி விளையாட்டுகளில் நொண்டி ஆட்டமும் மூட்டைப் பந்தயமும் குழந்தைகளின் மிகவும் விருப்பமான போட்டிகளாக அமைந்தன. சிரிப்பொலியும் உற்சாகக் குரல்களும் நிகழ்விடமெங்கும் மகிழ்ச்சியைப் பரப்பின.

திரு.முருகானந்தம் மற்றும் பிற பெற்றோர்கள் வெளிப்புற விளையாட்டுகளை சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்த உதவினர். மேலும், சுகுமாறன் அவர்கள் குழந்தைகளுக்கு கவனம், பொறுமை மற்றும் மனஒருமைப்பாட்டை வளர்க்கும் வகையில் ஒரு அமைதியான உட்கார்ந்து விளையாடும் ஆட்டத்தையும் அறிமுகப்படுத்தினார். ஓட்டமும் ஆரவாரமும் நிறைந்த விளையாட்டுகளுக்கு இடையில் இது ஒரு சிறந்த சமநிலையாக அமைந்தது.

விழாவில் தொடங்கிய விளையாட்டு அனுபவம் வீட்டிலும் தொடர்ந்து மகிழ்ச்சியை ஏற்படுத்தும் விதமாக ஒவ்வொரு குழந்தைக்கும் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் ஆடு புலி ஆட்டப் பலகை வழங்கப்பட்டது.



நூற்றாண்டுகள் பழமையான குறள்களை குழந்தைகள் வெறுமனே மனனம் செய்யாமல், ஆழமான பொருள் உணர்ந்து புரிந்து கொள்ளும் வகையில் அமைந்தது. நவீன கால வாழ்க்கையுடன் தொடர்புடைய வேடமிடல்,நடிப்புகள் மற்றும் சிறு நாடகங்கள் மூலம், வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் வழிகாட்டும் அறநெறிக் களஞ்சியமான திருக்குறளில் பொதிந்துள்ள காலத்தால் அழியாத மதிப்புகள், குழந்தைகளுக்கு எளிதில் புரியும் வகையில் எடுத்துரைக்கப்பட்டன.

குழந்தைகள் குறள்களை வாசித்தும், அவற்றின் பொருளைத் தங்கள் சொந்த வார்த்தைகளில் விளக்கியும், அன்றாட வாழ்க்கைச் சூழல்களுடன் இணைத்துப் பார்த்தும் சிறப்பாகப் பங்கேற்றனர். தமிழ் மொழியையும் அதன் உயர்ந்த அறநெறிகளையும் அடுத்த தலைமுறைக்கு மகிழ்ச்சியுடன் எடுத்துச் செல்லும் முயற்சியில், இந்த நாள் ஒரு முக்கியமான மைல்கல்லாக அமைந்தது.

## திரைப்படம் நாள் :

அனைவரும் ஒன்று சேர்ந்து, தமிழ் விளக்கவுரையுடன் 'கமலி from நடுக்காவேரி' திரைப்படத்தைக் கண்டு களித்தனர். படம் நடந்து கொண்டிருந்த போதே, குழந்தைகள் தெரியாத தமிழ் வார்த்தைகளை நிறுத்தி விளக்கம் கேட்டுக்கொண்டனர், இதனால் யாரும் கதையில் பின்தங்கவில்லை. படம் முடிந்த பிறகும் உரையாடல் தொடர்ந்தது. குழந்தைகள் படத்தில் இருந்த கற்றல் அனுபவங்களைப் பற்றி உற்சாகமாக விவாதித்து, தங்களுக்குப் பிடித்தவற்றைப் பகிர்ந்து கொண்டனர். சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட ‘மேக் அண்ட் சீஸ்’ மதிய உணவு பிற்பகலை நிறைவு செய்தது. திரைப்படம் போலவே உணவும் பெரும் வரவேற்பைப் பெற்றது எனலாம்.

## கலை நாள் :

கலை நாள், குழந்தைகளின் கற்பனைத் திறனை வெளிப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. நீர்வண்ண நிழற்படக் கலை (Watercolor Silhouette), கைவண்ணம் செய்யப்பட்ட புத்தக அடையாள அட்டைகள் மற்றும் பாரம்பரிய தமிழ்க் கோல வடிவமைப்புகள் போன்ற செயல்பாடுகள் மூலம், குழந்தைகள் பல்வேறு கலை நுட்பங்களை கற்றுக்கொண்டனர். தங்கள் படைப்புகளில் தமிழ்ச் சொற்களையும் பண்பாட்டு அடையாளங்களையும் இணைத்து உருவாக்கினர். நாளின் இறுதியில், அனைவரும் இணைந்து உருவாக்கிய பெரிய சுவரோவியம் (Collaborative Mural) நிகழ்வின் சிறப்பம்சமாக அமைந்தது. ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட படைப்பும் ஒன்றிணைந்து ஒரு அழகிய முழுமையான படைப்பாக மாறியது. குறிஞ்சியில் தலைமைப் பண்பு சிறு வயதிலிருந்தே வளர்க்கப்படுகிறது என்பதற்கான பெருமையான நினைவுச் சின்னமாக அது அமைந்தது.





## ஆரோக்கிய வாழ்வு நாள் :

குழந்தைகளை அருகிலுள்ள பூங்காவிற்கு அழைத்துச் சென்று, ஆரோக்கியம், நல்ல பழக்கவழக்கங்கள் மற்றும் இந்திய மசாலாப் பொருட்களை மையமாகக் கொண்ட காலைப் பொழுதை உருவாக்கியது. குழந்தைகள் ஒன்றிணைந்து 'ஆரோக்கியமான பழக்கங்கள்' சுவரொட்டியை உருவாக்கினர், வாசனையை வைத்து மசாலாப் பொருட்களைக் கண்டறியும் 'மர்ம ஜாடி' விளையாட்டை விளையாடினர், மேலும் தினசரி சமையலறைப் பொருட்கள் நல்வாழ்விற்கான கருவிகளாகவும் எப்படி பயன்படுகின்றன என்பதைக் கற்றுக்கொண்டனர். காலை முழுவதும் வழங்கப்பட்ட சிற்றுண்டிகள் குழந்தைகளின் உற்சாகத்தையும் ஆற்றலையும் நிலைநிறுத்தின. மேலும், நிகழ்வை ஒருங்கிணைத்த இளம் தலைவர்கள் முழு நாளையும் மிகுந்த நம்பிக்கையுடனும் திறமையுடனும் சிறப்பாக முன்னெடுத்தனர்.





**வரவிருக்கும் இசை நாள் :**

பறை இசைக்கருவி, அதன் வரலாறு மற்றும் தமிழ் பண்பாட்டில் அதன் முக்கியத்துவத்தை நேரடியாக அனுபவித்து அறியும் ஒரு செயல்வழிக் கற்றல் அமர்வாக இது அமையும். கோடையின் ஆரம்பத்தில் நடைபெற திட்டமிடப்பட்டிருந்த இந்த நிகழ்வு, இசைக்கருவிகளும் தேவையான ஏற்பாடுகளும் சிறப்பாக அமைய வேண்டிய காரணத்தால் ஆகஸ்ட் 29ஆம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு கல்விக்கூடம் மற்றும் இளையோர் குழு குழுக்களின் அறிவிப்புகளை கவனியுங்கள். குழந்தைகள் தவற விடக்கூடாத ஒரு முக்கிய நிகழ்வாக இது இருக்கும்.

வியூக விளையாட்டுகள் முதல் மசாலாப் பொருட்களை அறியும் செயல்பாடுகள் வரை, திருக்குறள் நாடகங்கள் முதல் தமிழ்த் திரைப்பட மதிய நிகழ்ச்சி வரை, இந்த கோடைகால முகாம் ஒரு எளிய சிந்தனையை அடிப்படையாகக் கொண்டது. பண்பாடு என்பது ஒன்றிணைந்து செய்து அனுபவிக்கும் போது மிகச் சிறப்பாகக் கற்றுக்கொள்ளப்படுகிறது.

இந்த நிகழ்வை சாத்தியமாக்கிய தன்னார்வலர்கள், பெற்றோர்கள் மற்றும் இளம் தலைவர்கள் தங்களது சனிக்கிழமை காலைப் பொழுதுகளை அர்ப்பணித்ததாலேயே இம்முயற்சி வெற்றியடைந்தது. அடுத்த ஆண்டு முகாமில் மேலும் பல குடும்பங்கள் இணைவார்கள் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

**நன்றி :**
**இளையோர் தன்னார்வலர்கள்** : யாழிசை, அவந்திகா
**தன்னார்வலர்கள்** : சுகுமாறன் , அருண், அம்பிகா, முருகானந்தம்
**நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்** : பிரீத்தி
**வழிகாட்டுதல்** : சுகுமாறன்

# குறிஞ்சி கலைவிழா – இசைத் திருவிழா

நமது குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் , இந்த ஆகஸ்ட் 1-ஆம் தேதி புரூம்ஃபீல்ட்டில்(Broomfield) உள்ள பாலிசேட் பூங்கா திறந்தவெளி அரங்கத்தில் (Palisade park amphitheater) ஒரு இசை விழாவை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்ச்சியை திருமதி.ஆனி ஜோஷிலா, செல்வி. ஸ்ம்ரிதி மற்றும் செல்வன்.கவின் தொகுத்து வழங்கினர்.தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே தொடங்கிய குறிஞ்சி இசை விழா, இசை சார்ந்த கலைநிகழ்ச்சிகளுக்கான ஒரு சிறப்பான நிகழ்வாக அமைந்தது.












தமிழ் மொழியின் பெருமையைப் போற்றும் வகையிலும், தமிழின் பண்பாட்டு செழுமையும் கலைமரபும் வெளிப்படும் வகையிலும் இந்நிகழ்ச்சி அமைந்தது. முதலில் மேடையேறிய குறிஞ்சி இசைக்குழு , தங்களின் உற்சாகமான இசையால் பார்வையாளர்களைக் கவர்ந்தனர். இசையின் இனிமை, மனதையும் காதுகளையும் குளிர்வித்தது.





சிறுவர், சிறுமிகள் தங்கள் இனிய குரலில் பாடியபோது, அரங்கமே மகிழ்ச்சியில் மலர்ந்தது. தொடர்ந்து இளம் குழுவினரின் நடன நிகழ்ச்சி, உற்சாகத்தையும் நவீனத்தையும் இணைத்து விருந்து அளித்தது.
இசை நிகழ்ச்சியில், குழந்தைகள் கீ-போர்டு , வயலின் , கிட்டார் , டிரம்ஸ் , புல்லாங்குழல் என பல்வேறு இசைக்கருவிகளை இசைத்துத் தெய்வீகமான இசை அனுபவத்தை வழங்கினர். நடனத்தில் சிறுவர்களுடன் பெரியவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்கள் திறமையை வெளிப்படுத்தினர்.
சிறுவர்களின் திறமைகள், பெற்றோர்களின் ஆதரவு மற்றும் ஏற்பாட்டாளர்களின் அர்ப்பணிப்பு ஆகியவை இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தன.

**இந்த இசை விழா, நினைவில் நிலைக்கும் ஒரு இனிய அனுபவமாக அமைந்தது.**

சிறுவர், சிறுமிகள் தங்கள் இனிய குரலில் பாடியபோது, அரங்கமே மகிழ்ச்சியில் மலர்ந்தது. தொடர்ந்து இளம் குழுவினரின் நடன நிகழ்ச்சி, உற்சாகத்தையும் நவீனத்தையும் இணைத்து விருந்து அளித்தது.
இசை நிகழ்ச்சியில், குழந்தைகள் கீ-போர்டு , வயலின் , கிட்டார் , டிரம்ஸ் , புல்லாங்குழல் என பல்வேறு இசைக்கருவிகளை இசைத்துத் தெய்வீகமான இசை அனுபவத்தை வழங்கினர். நடனத்தில் சிறுவர்களுடன் பெரியவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்கள் திறமையை வெளிப்படுத்தினர்.












சிறுவர்களின் திறமைகள், பெற்றோர்களின் ஆதரவு மற்றும் ஏற்பாட்டாளர்களின் அர்ப்பணிப்பு ஆகியவை இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தன.

**இந்த இசை விழா, நினைவில் நிலைக்கும் ஒரு இனிய அனுபவமாக அமைந்தது.**

# Title Sponsors

